மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சருடைய பொறுப்பு என்றாலும் மத்திய அரசாங்கம் ஒரு புதிய கொள்கையை உருவாக்கி இருக்கிறது. அதாவது வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்குக் குடிமைப் பொருள் வழங்குவதிலே ஒரு புதிய கொள்கை அனுசரிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் இருக்கிற காரணத்தால், தமிழ்நாட்டிலும் அந்த முறையைப் பின்பற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இந்த இருவண்ண அட்டைகள்— அரிசி மற்றும் அனைத்துப் பொருட்களும் வாங்குகிற ஏழை மக்களுக்கு ஒரு வண்ண அட்டையும், சர்க்கரை, மைதா அல்லது மண்ணெண்ணை போன்றவற்றை வாங்குகிற மக்களுக்கு ஒரு வண்ண அட்டையும்—வழங்க வேண்டும் என்று உணவு இலாகா பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு, தற்காலிகமாக அந்தத் துறை குடும்ப அட்டைகளை வழங்குவதில் காலதாமதம் இருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லலாம். ஏற்கெனவே சென்னை மாநகரத்தில்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில் உணவுத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய இரண்டு துறைகளின் மேலதிகாரிகள் கலந்துகொண்டார்கள். அதில் நியாயவிலைக் கடைகளை--ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளை இரண்டாக பிரித்து--கடைகளை உருவாக்கவேண்டுமென்றும், புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் உணவுத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு இருக்கிறார்கள்; அது விரைவுபடுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 194, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

194—

நியாயவிலைக் கடைகள் திறத்தல்

***282–திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்–அண்ணா மாவட்டம் வேடசந்தூரில் மக்கள் தொகை அதிகரித்து வருவதால் போதிய அளவு நியாயவிலைக் கடைகள் இல்லாததால் கூடுதலாக நியாயவிலைக் கடைகள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1996 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தற்போது வேடசந்தூரில் 3 முழு நேர நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. வேடசந்தூரின் மக்கள் தொகை இப்போது புள்ளியியல் ஆய்வு மூலம் துறைக்குக் கிடைக்கப்பெற்று இருப்பது 8295 ஆகும். அங்கே 3 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. அந்த 3 நியாயவிலைக்கடைகளில் ஒரு நியாயவிலைக் கடை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலமும், அடுத்த 2 நியாயவிலைக் கடைகள் திண்டுக்கல் மொத்த விற்பனை பண்டகசாலை மூலமாகவும் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும், 1050, 1100 என்ற அளவிற்கு 3 ஆயிரம் குடும்ப அட்டைகள் ஒதுக்கி, 3 நியாயவிலைக் கடைகள் மூலமாகப் பொதுமக்களுக்கு பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சீ.வெ. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில் மக்கள் தொகை கூடி இருக்கிற காரணத்தால், அங்கு நியாயவிலைக் கடை கூடுதலாக அமைக்க அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோ. தளபதி.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளிலே மக்கள் வரிசையாக நின்று காத்துக் கிடக்கக்கூடிய காட்சிகளைக் காண்கின்றோம். அதனைத் தவிர்ப்பதற்காக நாட்களைக் குறிப்பிட்டு விளம்பரப் பலகை வைக்குமாறு கண்டிப்பான உத்தரவை அரசு போடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் நீண்ட க்யூ இருப்பது உண்மைதான். அங்குள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து புதிய கடைகளை உருவாக்க வேண்டும் என்றும், அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து வேலை நாட்களிலும் இத்தகைய குடிமைப் பொருட்கள் கிடைக்கும் என்றும் உத்தரவாதம் இருக்கின்ற காரணத்தினாலும் இப்போது ஓரளவுக்கு நீண்ட க்யூ என்ற கொடுமை தவிர்க்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.